# 1 தொடக்கப் பயிற்சி: சுழற்சிமுறையில் கதை கூறுதல், முடிவுள்ள அல்லது தொடர்கதைகள்

**இலக்கு**

விளையாட்டாகவும் இயல்பாகவும் கதைசொல்லும் மகிழ்வினை ஊக்குவிக்க; இத்தொடக்கநிலைப் பயிற்சி எழுத்து வடிவ கதைசொல்லுதலுக்கான முதல் படிநிலையாகும் (கீழே பார்க்க #2). அதே வேளை, இக் கதைசொல்லும் பயிற்சி பாரம்பரியமொழியில் மாணவர்களின் வாயூடான வெளிப்பாட்டினையும் வளரச்செய்கிறது.

## சேர்ந்து கதைகள், தொடர், சங்கிலிக் கதைகள் கூறுதல்

1 - 6 ஆந் தரம் | 10 - 15 மணித்துளிகள்

**செயல்முறை**

அ) மாணவர்கள் (முடியுமாயின்) வட்டமாக இருத்தல். ஆசிரியர் அல்லது ஒரு மாணவர் ஒரு கதையின் தொடக்கத்தினை ஒன்று அல்லது பல வாக்கியங்களில் உரைக்கின்றார் (எடுத்துக்காட்டு: "அப்பொழுது காலை 3 மணி, எல்லாமே கடும் இருட்டு. மிக மெதுவாக இருண்ட வீட்டுத் தொகுதியின் முன்கதவு திறந்தது.") உடனடியாக: நாம் எல்லோரும் ஒன்றாக தொடர்ந்து இக்கதையினை ஆக்குவோம்!

ஆ) மாணவர்கள் ஒன்று அல்லது பல வாக்கியங்களால் (ஆகக் கூடியது ஐந்து வாக்கியங்கள்) ஒவ்வொரு கதையையும் தொடர்ந்து பின்னுகின்றனர். வரிசை வரிசையாக ஓர் ஒழுங்கின்றி அல்லது தொடராக அவர்கள் தம் முறையைப் பெற்றுக்கொள்ளலாம். இன்றியமையாதது என்னவெனில் ஒவ்வொருவரும் பங்களிப்பதேயாகும்.

---

**கருத்துகள்:**

- கிளர்ச்சிக் கதைத் தொடக்கங்கள் மாணவர்களால் ஒன்று சேர்க்கப்பட்டு வகுப்புகளுக்கு கொண்டுவரப்படலாம் அல்லது கொண்டுவரப்படவேண்டும். பெறக்கூடிய சான்றுகள், மாணவர்களின் வியப்பும் கற்பனையும், நூல்கள் அல்லது செய்தித்தாள் அறிக்கைகளிலிருந்து வாக்கியங்கள், கிளர்ச்சியுள்ள அல்லது சுவையான வேளைகளைக் காட்சிப்படுத்தும் படங்கள் அல்லது ஒளிப்படங்கள்.
- தெளிவான தொடர்புகொள் பணி ஒப்படை தவிர்க்க முடியாதது, பின்வருவது போல: "இக்கதையினை ஆக்கி, ஒரு முடிவுடன் நிறைவு செய்ய இன்னும் எங்களுக்கு 10 மணித்துளிகள் உள."
- இவ்வேலையில் எல்லா மாணவர்களும் ஒரே சீராகப் பங்கேற்றுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்த, ஆசிரியர் முதலிலேயே இரண்டு அல்லது மூன்று பொத்தான்களை அல்லது தாள் துண்டுகளைக் கொடுக்கலாம். ஒரு வாக்கியத்தை முடித்த மாணவர்கள் ஒரு பொத்தானையோ தாள் துண்டினையோ திருப்பிக் கொடுக்கவேண்டும். பயிற்சியின் முடிவில், எல்லா மாணவர்களும் தம் பொத்தான்களையோ தாள் துண்டுகளையோ திருப்பிக் கொடுத்திருக்கவேண்டும்.
- மேலும் இடம்பெறக்கூடிய வழிகாட்டி வேறுபாடுகள்: ஆண் மற்றும் பெண் மாணவர்கள் மாறி மாறியும், அல்லது இளைய மற்றும் மூத்தபிள்ளை மாறி மாறியும் அமைதல்.
- தன்னிச்சையை நலிவடையச் செய்யாதிருக்க, முடியுமான வரை திருத்தங்களை விட்டுவிடவும். விளங்க முடியாத அல்லது பொருத்தமற்ற பொருளை விளக்குதற்காக தலையீடுகளைக் குறைத்துக்கொள்க.
- நிகழக்கூடிய தொடர்ச்சி: மாணவர்கள் (தனியாக அல்லது இருவராக) பொதுவாக உருவாக்கப்பட்ட கதைகளை எழுத்தில் தொகுத்தல், பின்னர் எழுத்துருக்கள் ஒப்பிடப்படல்.
- இப்பயிற்சி ஒரு பாடத்தினை முடிக்கவோ அல்லது வகுப்பு நடக்கும்போது சிறிது தளர்த்துதற்கு ஓர் செயற்பாடகவோ அமைவதற்கும் ஏற்றதாக அமையலாம்.

**மாற்றுகள்:**

1. செயற்பாடு நன்றாக அறிமுகம் செய்யப்பட்டிருப்பின், முழு வகுப்பினையும் இப்பயிற்சியில் ஈடுபடுத்துவற்கு ஈடாக, ஒன்று அல்லது இரண்டு குழுக்கள் மட்டத்தில் இதனை நடத்தலாம்.

2. "பொது நூல்" வேறுபாடு: ஒருவனோ/ஒருத்தியோ கையில் ஒரு நூற்பந்தினை அல்லது ஒரு நூலை வைத்துக்கொண்டு கதை சொல்லத் தொடங்குகிறான்/தொடங்குகிறாள். கதையைத் தொடர்வதற்காக அவள்/அவன் பந்தினை மற்றவருக்கு (அல்லது தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு) கடத்தும்போது நூலின் தொடக்கத்தைத் தன் கையிலே வைத்திருப்பாள்/வைத்திருப்பான். இவ்வாறு இது தொடர, ஒவ்வொரு பங்கேற்பவரும் நூல்புரியினை அடுத்த மாணவருக்குக் கடத்தும்போது நூலினைக் கையிலே பிடித்திருப்பர். இதனால் கதையின் வளர்ச்சிக்கு இணையொத்ததாக ஒரு நூல் வலை (ஒன்றினூடாக வளர்த்துச் செல்லும் குறியீடு symbolisches Leitmotiv) வகுப்பு முழுவதும் பரப்பப்படுகிறது. அதே நேரத்தில், எந்த மாணவர்கள் தொடரில் இன்னும் பங்கேற்கவில்லை என்பதையும் அது காட்டுகிறது.)


# 2 இணைந்து எழுதுதல்: கவிதை, தொடர், சங்கிலி அல்லது மடிக்கதைகள்

**இலக்கு**

மாணவர்களின் ஆக்கத்திறனையும் மற்றும் விளையாட்டாக எளிதாக அணுகக்கூடிய "தொடக்கநிலை" முறையில் தங்கள் முதல் மொழியில் எழுதுவதில் மற்றும் கதை சொல்வதில் மகிழ்வடைவதையும் ஊக்குவிப்பதற்கு.

## இணைந்து எழுதுதல்: கவிதை, தொடர், சங்கிலி அல்லது மடிக்கதைகள்

1 - 9 ஆந் தரம் | 15 - 20 மணித்துளிகள்



கருவிகள்:
ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் ஒவ்வொரு தாள் வெறுமையாக அல்லது முதல் வாக்கியம் அல்லது பந்தியுடன் (ஆசிரியரின் கற்பனை அல்லது எழுத்துருக்களிலிருந்து மாணவர்கள் சேர்த்த முதலாவது வாக்கியங்களின் திரட்டிலிருந்து).
தாள் வெறுமையாயிருப்பின், மாணவர்கள் தம்முடைய முதல் வாக்கியங்களை அமைத்துக் கொள்ளவேண்டும்.

**செயல்முறை**

அடிப்படை முறை பின்வருமாறு:

அ) மாணவர்கள் ஒரு கதையின் தொடக்கத்தின் ஒரு பகுதியாக ஒரு வாக்கியம் அல்லது ஒரு சிறிய பந்தியினைப் பெறுவர் அல்லது அப்படியொரு தொடக்கத்தினைத் தாங்களாகவே பக்கத்தின் மேல் பகுதியில் எழுதுவர்.

ஆ) பின்னர் அத்தாள் துண்டினை தங்கள் வலது பக்கத்திலுள்ளவர்களுக்குக் கடத்துகிறார்கள், அவர்கள் அதில் எழுதியவற்றைப் படித்துவிட்டு அக்கதையினைத் தொடர 1அல்லது 2 வாக்கியங்களைச் சேர்த்து வலது பக்கத்தில் அடுத்துள்ளவரிடம் கடத்தப்படுகிறது.

இ) எல்லாத் தாள்களும் வகுப்பு அல்லது குழு ஊடாக ஒரு தடவை சுற்றிச் செலுத்தியவுடன் பயிற்சி முடிவடைகிறது.

ஈ) நிறைவாக, கதைகள் உரக்கப் படிக்கப்படும் அல்லது சுவரில் தொங்கவிடப்படும் அல்லது உரக்கப் படித்த பின்னர் சுவரில் தொங்கவிடப்படும்.

**கருத்துகள்:**

- ஒவ்வொரு மாணவனுக்கும்/மாணவிக்கும் ஒரு தாளாக ஒரு தொடர்வரிசையின் முடிவின் முன்னர், (பெரும்பாலும் வகுப்பு முழுவதிலும் தாள்கள் பகிர்ந்தவுடன்) இறுதியான இரண்டு அல்லது மூன்று வாக்கியங்கள் கதையினை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என மாணவர்களுக்கு அறிவுரை வழங்கல் பயனுள்ளது, ஏனெனில் அது வெறுமனே திடீரென முடிவுறாதிருப்பதற்காக.
- சிறுவர்களுடன், முதலில் கதைகளை வாயூடாக உருவாக்குவது துணைசெய்வதாயிருக்கும் (மேலே #1 தொடக்கப் பயிற்சியை பார்க்க).

I